Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 321

செவ்வாய்க்கிழமை
14 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



வெள்ளைக்கொடி விவகாரம்

## பொன்சேகாவின் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க வேண்டியதில்லை

பணிகின்றது பெரமுன

கொழும்பு, ஒக். 14
முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சுமத்தி வரும் குற்றச்சாட்டுகள் தொடர்பில், பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூறியுள் 11



சீரற்ற காலநிலை காரணமாக

# செம்மணி அகழ்வு மீண்டும் தாமதம்!

மூன்றாம்கட்ட அகழ்வுக்கு ரூ.19 மில்லியன்

**யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 14**

அரியாலை - செம்மணி மனிதப் புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள், சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன. இதுதொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கை நவம்பர் மாதம் 3ஆம் திகதி தீர்மானிக்கப்படவுள்ளது. 11

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 14
ஹெரோய்னை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் 11

## மோ.சைக்கிளால் வீழ்ந்தவரை ஏறி நசுக்கியது பேருந்து

காற்பந்தாட்ட வீரர் பரிதாபச் சாவு!



யாழ்ப்பாணம், ஒக். 14
யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில், நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 11

## ரயிலுடன் மோதுண்டு ஓட்டோ சாரதி பலி!

கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, ஒக். 14
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த யாழ் தேவி ரயிலும், ஓட்டோவொன்றும் விபத்துக்கு உள்ளானதில் குடும்பத் 11

சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில்

## சடலமாக மீட்கப்பட்ட பெண் சித்திரவதை செய்து கொலை

உடற்கூறாய்வில் திடுக்கிடும் தகவல்



யாழ்ப்பாணம், ஒக். 14
யாழ்ப்பாணம் சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகாமையில் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்ட நிலையில், அந்தப் 11

## திஸ்ஸ விகாரையில் கயல் மஹா உற்சவம்


காணி உரிமையாளர்கள் எதிர்த்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14
தையிட்டி திஸ்ஸ விகாரையில் பலாலிப் பொலிஸாரும், காங்கேசன்துறைப் பொலிஸாரும் இணைந்து நேற்றுத் திங்கட்கிழமை காலை பெருமெடுப்பில் கயல் மஹா உற்சவத்தை நடத்தினார்கள். அதற்கு எதிர்ப் 11

## வீடொன்றுக்குள் நுழைந்து வன்முறைக்குழு அடாவடி!

ஓட்டோ, மோ.சைக்கிள் தீக்கிரை
சண்டிலிப்பாயில் சம்பவம்

விரிவு பக்கம்:- 11



முச்சந்தி முரளி

'சட்டவிரோத விகாரையில பொலிஸ் திருவிழா நடத்துது என்டால், பாலுக்கு பூனையை காவல் வைச்ச மாதிரித்தான் கண்டியளோ'




## பல்வேறு குற்றச்செயல்கள் 14 சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 14
யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று தினங்களாக மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்புகளில், 14 சந்தேகநபர்கள் 11

## இடமாற்றக் கொள்கைகளை சரிவர நடைமுறைப்படுத்துக

ஆசிரியர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 14
இடமாற்றக் கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியும், தற்போது வழங்கப்படும் இடமாற்றங்களில் அரசியல் பாகுபாடு உள்ளது என்று குற்றஞ்சாட்டியும் இலங்கை 11



## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் கோரிப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 14
வடக்கு மாகாணத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றிவரும் வெளிமாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தமக்கு இடமாற்றம் வழங்குமாறு 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4223 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 18 58 59 71 |
| விசேட எழுத்து | O |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1290 |
| வெற்றி இலக்கினம் | [illegible] |
| வெற்றி இலக்கங்கள் | 10 38 54 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0249 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 0 1 5 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2329 |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 27 36 39 70 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5981 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 6 6 9 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2011 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 07 10 24 62 |
| விசேட எழுத்து | Z |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0556 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 6 6 9 4 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0097 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 04 06 30 43 |

# நிதி மோசடியாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல திட்டவட்டம்

கொழும்பு, ஒக்.14

**அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும். குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**

ராஜபக்சக்கள் உட்பட கடந்தகால ஊழல்வாதிகளின் ஊழல் மோசடிகள் வெளிவரும்போது, பல ஊழல்வாதிகள் கலக்கமடைந்துள்ளனர். அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். றக்பி வீரர் தாஜுதீனின் படுகொலை தொடர்பில் புதியவிடயங்கள் வெளியாகும்போது, நாமல் ராஜபக்ச அச்சமடைந்து பொலிஸ் திணைக்களத்தின்மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்தினார்கள். சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவை அரசியல்மயப்படுத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்குக் கிடையாது. ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே ஒரு சில அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்படவுள்ளன. பொலிஸ் ஆணைக்குழுவின் சுயாதீனத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது- என்றார். (எ-க-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0689 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 3 1 0 8 3 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2955 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 29 54 55 75 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 19 25 53 58 |
| வெற்றி வாரம் | 5016 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| தினம் | |
| கடகம் | |
| வெற்றி இலக்கம் | 02 03 37 44 |
| சீட்டிழுப்பு வாரம் | 4667 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 25 |
| வெற்றி இலக்கம் | 19 25 53 58 |
| வெற்றி வாரம் | 2131 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 03 06 21 28 |
| வெற்றி வாரம் | 2781 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 13.10.2025 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 18 21 26 37 |
| வெற்றி வாரம் | 2169 |

# குழந்தை துஷ்பிரயோகம்: முதியவருக்கு கடூழியச் சிறை

கொழும்பு,ஒக்.14

காலியில் ஒரு வயதுக் குழந்தையை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்காக 65 வயதுடைய முதியவருக்கு 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து காலி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கில் குற்றவாளிக்கு எதிராகச் சுமத்தப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதையடுத்து நீதிபதி இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக, பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு 5 இலட்சம் ரூபா நஷ்ட ஈடு வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நஷ்ட ஈட்டைச் செலுத்தத் தவறினால், மேலதிகமாக ஆறு மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)



# 100க்கும் அதிக மருந்துகள் நோயாளருக்கு எட்டாக்கனி

கொழும்பு, ஒக்.14

நாடளாவிய ரீதியில் உள்ள மருந்தகங்களில் சுமார் 100க்கும் மேற்பட்ட மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவர்களின் தொழிற்சங்கக் கூட்டணி தெரிவித்துள்ளது. பிரதான மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சைப் பொருள்களுக்குக் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது. 2026ஆம் ஆண்டின் முற்பகுதியில் இலங்கையின் மருந்துப் பற்றாக்குறை முற்றிலுமாகத் தீர்க்கப்படும் எனச் சுகாதார அமைச்சு பலமுறை உறுதியளித்திருந்தது. இந்தப்பிரச்சினையைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட பல அமைச்சரவை முடிவுகள் எடுக்கப்பட்டபோதிலும், எவையும் வெற்றியளிக்கவில்லை என்று அந்தக் கூட்டணியின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அநுரகுமார ஆட்சியில் மலையகத்துக்கு விடிவு

## பெருந்தோட்ட அமைச்சர் நம்பிக்கை



கொழும்பு, ஒக்.14

200 ஆண்டுகளாக வசிப்பதற்குக் கூட வீடில்லாது ஏமாற்றப்பட்ட மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மிளிரச்செய்வதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான எமது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்று பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார். பண்டாரவளையில் இந்திய வீட்டுத்திட்டத்தின் வீட்டுறுதிக்கான ஆவணத்தை பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பெருந்தோட்டத் தொழிலாளர்களால் நாட்டுக்கு வருடாந்தம் சுமார் 2 பில்லியன் டொலருக்கும் அதிக அந்நியச் செலாவணி வருமானம் கிடைக்கின்றது. ஆனால் அந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படுவதில்லை. அந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தை எமது அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# கொழும்பு நகரில் மட்டும் 4 பில். ரூபா வரி நிலுவை!

## கோபா குழுவில் தகவல்

கொழும்பு, ஒக்.14

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள், செலுத்தப்படாத மதிப்பிடப்பட்ட வரிகள் 4 பில்லியன் ரூபாவுக்கு அதிகமாக நிலுவையில் உள்ளன என்று பொதுக் கணக்குக்குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் கோபா குழுவில் கொழும்பு மாநகர சபை அதிகாரிகள் முன்னிலையானபோது இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே பலமுறை பரிந்துரைகள் வழங்கப்பட்டபோதும், வரி வசூலில் மிகக் குறைந்த முன்னேற்றமே காணப்படுகின்றது என்று கோபா குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் சுட்டிக் காட்டியுள்ளார். கடந்த ஜூன் மாத நிலைவரப்படி வெறும் ரூ. 53 மில்லியன் மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர், இந்த மிகப்பெரிய நிலுவைத் தொகை காரணமாக கொழும்பு மாநகரசபையின் நிதி நிர்வாகம் மற்றும் வருவாய் ஈட்டும் திறன் கேள்விக்குள்ளாகியுள்ளது என்றும் தெரிவித்தார்.

நிலுவைத்தொகையை விரைவாக வசூலிக்கவும், இது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கவும் தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்று கொழும்பு மாநகரசபை மேயர் உறுதியளித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சீர்திருத்தங்கள் செய்யாதுவிடின் இலங்கை வறுமையில் சிக்கும்!

## வறுமைப் பகுப்பாய்வு மையத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஒக்.14**

**துணிச்சலான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படாவிட்டால், உலகளாவிய நிலையற்ற காரணிகளின் அடிப்படையில், இலங்கையில் ஏற்கனவே உயர்ந்த வறுமை நிலைகள் மேலும் உயரக்கூடும், குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்நோக்கவேண்டியேற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.**

குளோபல் மற்றும் வறுமைப் பகுப்பாய்வு மையத்தால் தயாரிக்கப்பட்டுள்ள "இலங்கையின் உருமாறும் பொருளாதார வளர்ச்சியை 2025 முதல் 2030 வரை நிலைநிறுத்துதல்" என்ற தலைப்பிலான அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமி, மத்திய வங்கியின் தற்போதைய உதவி ஆளுநர் சந்திரநாத் அமரசேகர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் யெவெட் பெர்னாண்டோ மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் சிரிமல் அபேரத்ன ஆகியோர் அடங்கிய ஒரு சுயாதீன ஆராய்ச்சி குழுவால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-

கடந்த காலத்தில் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து இலங்கை மீண்டு வருகிறது. இலங்கை தற்போது ஒரு முக்கியமான கட்டத்தில் இருப்பதுடன், தற்போதுள்ள பேரியல் பொருளாதார உறுதிப்படுத்தலைப் பராமரிக்கவேண்டும். நாட்டின் நலனைக்கருத்திற்கொண்டு பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகளைச் செயற்படுத்தவேண்டும். கடுமையான கடன் மறுசீரமைப்பு மற்றும் அதிகரித்து வரும் வறுமையைத் தவிர்க்கக் கட்டமைப்புச் சீர்திருத்தங்களை அவசரமாகச் செயற்படுத்துவது அவசியம். மறுசீரமைப்புகள் இல்லையெனில், ஏற்கனவே உயர்ந்த வறுமைநிலைகள் மேலும் உயரக்கூடும்-என்றுள்ளது. (ச-இ)

## துப்பாக்கி ரவைகள் மீட்பு

கொழும்பு, ஒக்.14

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தில் இருந்து ரி-56 ரகத் துப்பாக்கிக்கான ரவைகள் உட்பட நூற்றுக்கணக்கான ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன. மொத்தமாக 715 ரவைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## பற்றுச்சீட்டுகளை வழங்காத நடத்துநர்கள் இடைநீக்கம்

கொழும்பு.ஒக்.14

பயணிகளுக்குப் பற்றுச்சீட்டு வழங்காமைக்காக மேல் மாகாணத்தில் 57 பஸ் நடத்துநர்கள் தற்காலிகமாகப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று மேல் மாகாணப் போக்குவரத்து ஆணையகம் தெரிவித்துள்ளது. இந்த மாதம் முதலாம் திகதி முதல் 10ஆம் திகதிவரையான காலப்பகுதியிலேயே நடத்துநர்கள் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேற்கு மாகாணத்தில் இயக்கப்படும் பஸ்களில் பயணிக்கும் பயணிகள் முதலாம் திகதி முதல் பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## கேணல் விதுசாவின் தந்தை காலமானார்



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாலதி படையணியின் சிறப்புத்தளபதியும், விடுதலைப்புலிகளின் மகளிர் அணித் தளபதியுமான கேணல் விதுசாவின் தந்தையார் கணபதிப்பிள்ளை கந்தையா யாழ். பொன்னாலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் ஆகமக் கிரியைகள் பொன்னாலையில் அமைந்துள்ள அவரது மகனின் இல்லத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை இடம்பெற்று, கப்பூது இலந்தைத்திடல் இந்து மயானத்தில் சடலம் தகனம் செய்யப்பட்டது. (எ-25-66)

## ஹெரோய்னுடன் சிக்கிய பௌத்த தேரர்

கொழும்பு, ஒக்.14

ஹெரோய்ன் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் உட்பட மூவர் மெல்சிறிபுரப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குருநாகலை கரந்தகொல்ல பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றில் சந்தேகநபர்கள் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

27 வயதுடைய தேரரிடமிருந்து 2 ஆயிரத்து 300 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருளும், தேரர் பயன்படுத்தினார் என்று கூறப்படும் அதி சொகுசு கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## வீரவன்ஸவுக்கு மீண்டும் அழைப்பு

கொழும்பு, ஒக்.14

வாக்குமூலம் பெறுவதற்காக முன்னாள் அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸவை நேற்று முன்னிலையாகுமாறு தங்காலைப் பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளபோதும், அவர் நேற்று முன்னிலையாகவில்லை. நேற்று முன்னிலையாக முடியாதமை தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் பிறிதொரு தினத்தில் முன்னிலையாவேன் என்றும் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஆடாத ஆட்டமெல்லாம்....!

ஆசை அறுபதுநாள் மோகம் முப்பதுநாள். அதுக்கு மிஞ்சி ஆசையும், மோகமும் நிண்டுபிடிக்காது. அதையும் தாண்டி ஒரு வருசமா நிண்டு பிடிச்ச திசைகாட்டிக்கு இவ்வளவு நாளும் வெள்ளி துலாவில நிண்டதால, பெரிசாப் பிரச்சினையள் வரேலை. ஆனால் இப்ப அந்தக் கூட்டணிக்கு ஏழரைச்சனியன் தொடங்கிட்டுது போல. ஏனெண்டால் அடுத்தடுத்து மூண்டு எலக்சனில சொல்லியடிச்ச அந்தக் கூட்டணிக்குள்ள இப்ப குத்துவெட்டுகள் கடுமையாகியிருக்குதாம். ஆட்சியமைக்கேக்கையே அந்தக் கூட்டணிக்குள்ள ரண்டு பிரிவு இருந்தது. ஜே.வி.பி. ஒருபக்கமாவும், மற்றக்கட்சியள், அமைப்புகள் இன்னொரு பக்கமாவும் தான் இருந்தவை. எண்டாலும் எலக்சனில கிடைச்ச பெரிய வெற்றியால அந்தப் பிளவுகள் கண்ணுக்குத் தெரியேலை. ஆனால் இப்ப ஆட்சிக்கு வந்து ஒரு வருசம் கழிஞ்ச பிறகும், அதே வெற்றிமனோநிலை இருக்காது தானே. அதோட 'நீ பெரிசோ? நான் பெரிசோ?' எண்ட ஈகோவும் ஒவ்வொருத்தருக்குள்ளையும் வளர்ந்திருக்கும்தானே. என்னதான் வெளியில நாங்கள் எல்லாரும் ஒருகூட்டுக்குயில்கள் எண்டு திசைகாட்டிக்காரர் பாட்டுப்படிச்சாலும், அவையும் மனிசர்தானே. மாற்றம் எண்டு வெளியில சொல்லிக்கொண்டாலும், உள்ளுக்க முந்தின ஆட்சியாளர்கள் மாதிரி தாங்களும் அதிகாரத்தோடையும், செல்வச் செழிப்போடையும் சனத்துக்கு முன்னால திரியோணும் எண்டுதானே அவை எதிர்பார்ப்பினம். அதோட தங்களைவிட மற்றவை ஸ்கோர் பண்ணுகினம் எண்டால், அவைக்கு எதிரான கதையளை மேல்மட்டத்துக்கு பத்தவைச்சு, அவையைக் கீழ இறக்கிற விளையாட்டுகளும் திசைகாட்டியில நடக்குதாம்.

போனகிழமை அமைச்சரவை மாற்றம் நடந்ததெல்லோ. அதுதான் திசைகாட்டிக்குள்ள இருக்கிற பிரச்சியனையளை வெளியால கொண்டந்திருக்கு. இதில கடுமையாப் பாதிக்கப்பட்டிருக்கிறது பிமல் ரத்நாயக்கதான். ஆள் வெளியில பாக்கத்தான் சாதுவான ஆள். ஆனால் கடும் முசுடாம். தொட்டதுக்கெல்லாம் கத்துறதும், தான் பிடிச்ச முயலுக்கு மூண்டுகால் எண்டு விடாப்பிடியா நிக்கிறதும் தான் அவரின்ர உண்மையான குணம்., அதாலதான் அந்தாளோட வேலை செய்ய ஏலாது எண்டு அவரின்ர அமைச்சுக்கு கீழவாற துறையளின்ர செயலாளர்மார் ஆறேழுபேர் வேலையை விட்டே விலத்திட்டினம். கத்திக்கு மேல நடக்கிற மாதிரித்தான் அவரோட பழகோணும். எப்ப சிரிப்பார், எப்ப கத்துவார் எண்டு ஆருக்குமே தெரியாதாம். அதோட இந்தியா எண்டாலே பிமலுக்கு வேப்பங்காய் மாதிரி கய்க்குமாம். அந்த வன்மத்தில தான் இந்தியாவின்ர உதவியில செய்ய வெளிக்கிட்ட காங்கேசன் கார்பர், பலாலி எயார் போர்ட் வேலைத்திட்டங்களை வேணுமெண்டே பிமல் செய்யாமல் இழுத்தடிச்சவர். கட்சிக்குள்ள இருக்கி றவையோடையும் ஒவ்வொருநாளும் ஏதும் ஒரு உறண்டை இழுக்காட்டி அவருக்கு நித்திரை வராதாம். 'ஒண்டில் அவர் இருக்கோணும், இல்லாட்டி நாங்கள் இருக்கோணும்' எண்டு ஜே.வி.பி.காரரே சொல்லுற அளவுக்கு பிமலின்ர அட்டகாசம் கூடிக்கொண்டே போனதாலதான், ரில்வின் சில்வாவின்ர உத்தரவில அவரிட்ட இருந்த துறைமுகம், சிவில் விமான சேவை அமைச்சுகளை அநுரகுமார பறிச்சிருக்கிறார். கனபேர் சொல்லிறமாதிரி காங்கேசன் கார்பரை இப்போதைக்கு புனரமைக்க மாட்டம் எண்டு இந்தியாவுக்கு எதிராச் சொன்னதாலதான் அவரின்ர பதவியைப் பறிச்சதெண்டு ஒரு கதை ஓடுது. ஆனால் அதுக்கும் அமைச்சுப் பதவியைப் பறிச்சதுக்கும் சம்பந்தமே இல்லையாம்.

அப்பிடி அமைச்சைப் பறிச்ச பிறகும் அவர் அடங்கின மாதிரித் தெரியேலை. இப்பவும் தானேதான் துறைமுக , சிவில் விமான அமைச்சர் எண்டது மாதிரி, அது சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும், அந்தத் துறையில இருக்கிற பெரிய உத்தியோகத்தர்மாருக்கும் போன் பண்ணி, 'என்ன நடக்குது?', 'ஏது நடக்குது?' எண்டு அப்டேட் கேக்கிறதோட, 'இதை அப்பிடிச் செய்யுங்கோ, அதை இப்பிடிச் செய்யுங்கோ' எண்டு ஓர்டரும் போடுறாராம். அதிகாரத்தைப் பறிச்ச பிறகே இவ்வளவு கூத்தெண்டால், அதிகாரம் இருக்கேக்க என்னென்ன ஆட்டமெல்லாம் போட்டிருப்பார் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தையின் நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரித்து, உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்காலத்துக்குப் பயன் தரும்வகையில் முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வாழ்க்கைத்துணையின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள்.சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக் கூடும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். உறவினர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மன வருத்தங்கள் நீங்கும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கும். குடும்பத்தினர் உங்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பார்கள்.

**கன்னி:** மாலையில் உறவினர்கள்மூலம் கிடைக்கும் செய்தி அளவற்ற மகிழ்ச்சி தருவதாக இருக்கும். குடும்பத்தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். நண்பர்களால் வீண்செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** திடீர்ச்செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. மற்றவர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவி செய்வார்கள். வீட்டில் பராமரிப்புப்பணிகள் அதிகரிப்பதன் காரணமாக உடல் அசதி ஏற்படும்.

**தனுசு:** தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சிலருக்குத் தெய்வப்பணிகளில் பங்கேற் கும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்குத் தாய்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மகிழ்ச்சியானநாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண லாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இந்திய மீனவர் கைதுக்கு வடக்கு மீனவர்கள் ஆதரவு

மன்னார், ஒக்.14

**நாட்டின் சட்டதிட்டங்களைமீறி தொடர்ந்தும் இலங்கைக் கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுகின்ற இந்திய மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைக்கு நாங்கள் ஆதரவை வழங்குகின்றோம் என்று வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்டத் தலைவர் அன்ரனி சங்கர் தெரிவித்துள்ளார். மன்னாரில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த 47 இந்திய மீனவர்கள் கடந்த சில தினங்களுக்குமுன் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இதற்கு எதிராக இந்தியாவில் போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராகிவருகின்றனர். நாங்களும் இந்தக் கடலை நம்பி இருக்கின்றோம். எங்களையும் வாழவிடுங்கள். கோடிக்கணக்கான பெறுமதியான கடல் வளங்களையும், மீன்பிடி உபகரணங்களையும் இழந்து கொண்டிருக்கிறோம். இலங்கைக் கடற்பரப்புக்கள் நுழைந்தால் கைதுசெய்வதில் எவ்விதத் தவறும் இல்லை-என்றார். (க-56)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக்.14

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 42ஆவது சொற்பொழிவு கோவிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், சைவப்புலவர், பிரசங்கச் சக்கரவர்த்தி சி. கா. கமலநாதனின் "தேவரையேவல்கொள் படலம் " எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

++++

யாழ்ப்பாணம், ஒக்.14

சைவவாழ்வியலில்திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடத்தப்படும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்- 27 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில் பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கவாரிதி ச. நவநீதனின் "விடையிலச் சினையிட்ட படலம்" எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

# வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றத்தில் முறைகேடு

## ஆசிரியர் சேவைச் சங்கம் கண்டனம்


வடமாகாண கல்வித் திணைக்களத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றப் பட்டியல் சுயநலத்துடன் வெளியிடப்பட்டுள்ளதுஎன்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் உப செயலாளர் காரளசிங்கம் பிரகாஷ் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். வெளியிடப்பட்டுள்ள இடமாற்றப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்கள், உரிய நிர்வாக நடைமுறைக்கேற்ப தங்களுடைய மேன்முறையீடுகளை அதிபர் ஊடாக வலயம் அல்லது மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்து தீர்வைப் பெற முடியும். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கியமான பதவியாளர் ஒருவர், தனது சகோதரிக்காக தன்னிச்சையாகச் செயற்பட்டு, பொய்யான கருத்துகளைப் பரப்பி ஆசிரியர்களைத் தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளார். கல்வி முன்னேற்றத்தைவிட குடும்ப நலனை முன்னிலைப்படுத்தும் இவ்வாறான சுயநல நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்-என்றார். (க-20)

# வாக்குவாதம் முற்றியதில் ஒருவர் கொலை

கொழும்பு,ஒக்.14

குருநாகல், குடாகல்கமுவப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் 34 வயதுடையவர் எனத்தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர் அவரது சகோதரனின் வீட்டில் மற்றுமொரு குழுவினரோடு மது அருந்திக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து, சகோதரனால் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவரின் சகோதரர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற் கொண்டுவருகின்றனர். (ச-இ)





# மின்தாக்கி ஒருவர் பலி

கொழும்பு, ஒக்.14

வத்தளை - மாபோல பகுதியில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். கட்டடத்தின் மேல்தளத்தில் நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டிருந்தபோது அருகிலிருந்த உயரமுத்த மின்கம்பியுடன் தொடுகையுற்றதால் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. வத்தளையைச் சேர்ந்த 55 வயதான வரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

தீயவனை நண்பனாக்கிக் கொள்வதைவிட தனிமையை நண்பனாக்கிக் கொள்வது மேல்.

முகமது நபி


# முடிவல்ல ஆரம்பம்!

இலங்கையில் சிறு பெட்டிக்கடைகள் முதல் பெரு வணிக நிலையங்கள் வரை எங்கு சென்றாலும், வாடிக்கையாளர்களுக்குப் பொருள்களுடன் இலவசமாக வழங்கப்படும் பொலித்தீன்(சொப்பிங்) பைகள் எங்கள் எல்லோரது வாழ்வையும் இறுகச்சூழ்ந்துள்ளன. அவை எளிதில் கிடைப்பதோடு, எளிதில் பயன்படுத்தக் கூடியவையாகவும் இருப்பதால், மக்கள் அவற்றின் நீண்டகால விளைவுகளைப் பெரிதாக எண்ணுவதில்லை. ஆனால், இப்படிப் பொலித்தீன் பைகள் தேவையான அளவுக்கு இலவசமாக வழங்கப்படுவதால், சுகாதாரச்சீர்கேடும், சுற்றுச்சூழல் அழிவும், இயற்கை மாசுபாடும் மெல்ல மெல்ல பெருகிக்கொண்டே வருவதை எவரும் உணர்வதில்லை.

பொலித்தீன் என்பது அழிவற்ற ஒரு அரக்கன். அது பல வருடங்கள் மண்ணில் சேர்ந்து கிடக்கும்; அதிலிருந்து வெளியேறும் நச்சுக்கூறுகள் நிலத்தையும் நீரையும் பாதிக்கின்றன. மழைநீர் வடிகால்களில் சிக்கி, வெள்ளப்பெருக்குகளுக்குக் காரணமாகவும் மாறுகிறது. அத்தோடு வீதியோரங்கள், பூங்காக்கள், கடற்கரைகள், சந்தைகள், கடைச்சூழல்கள், பெருவெளிகள் என எங்கும் பரவிக் கிடக்கும் இந்தப் பொலித்தீன் பைகள், நாட்டின் அழகிய முகத்தை அசிங்கமாக்குகின்றன. இதற்குத் தீர்வாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நவம்பர் முதலாம் திகதி முதல் வணிக நிலையங்கள் இலவசமாக பொலித்தீன் பைகள் வழங்கக் கூடாது என்ற வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டிருப்பது, சுற்றுச்சூழலைக் காக்கும் நோக்கில் எடுத்துள்ள முக்கியமான முடிவாகும்.

இந்த முடிவிற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். ஏனெனில், பலரது வாழ்க்கையில் பொலித்தீன் பைகள் இன்றியமையாத பொருளாக மாறிப்போயுள்ளன. சிறு வியாபாரிகளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு ஆரம்பத்தில் சிறிதளவு சிரமம் ஏற்படலாம். வாடிக்கையாளர்களும் தங்களுடன் துணிப்பைகளையோ அல்லது கடதாசிப்பைகளையோ எடுத்துச் செல்லும் பழக்கத்தைக் கொண்டுவரவேண்டியுள்ளது. ஆனாலும், ஆரம்பத்தில் குறுகிய காலத்துக்கு இப்படிப் பொலித்தீன் பைகளை இலவசமாகப் பெறமுடியாமல் திண்டாடினாலும், நீண்டகால நோக்கில் சுற்றுச்சூழல் சுத்தம், மக்களின் ஆரோக்கியம் ஆகியன இந்தத் திட்டத்தால் மேம்படவே செய்யும். பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக கடதாசிப்பைகள், துணிப்பைகள், கயிற்றுப் பைகள் போன்ற மாற்றீடுகள் பயன்பாட்டில் கொண்டுவரப்படவேண்டும். கடதாசிப்பைகள் இயற்கையில் விரைவில் அழிந்து விடுவதால் மண் மாசுபடாது. துணிப்பைகள் நீண்ட காலம் பயன்படுத்தக்கூடியவை என்பதால் பொருளாதார ரீதியிலும் பயனுள்ளவையாகும். இம்மாற்றீடுகளால் உள்நாட்டுத் தொழில்களுக்கு வேலை வாய்ப்பும் வருமானமும் அதிகரிக்கும். ஒருவரின் சிறுபழக்க மாற்றம், சமூகம் முழுவதும் ஒரு பெரிய நல்ல மாற்றத்தை உருவாக்கக்கூடும்.

பொலித்தீனற்ற சமூகத்துக்கான பாதை எளிதானதல்ல. ஆனால் அது அவசியமானது. அரசாங்கத்தின் இந்தத்திட்டம் வெற்றிபெறவேண்டுமெனில், மக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். பாடசாலைகளிலும், ஊடகங்களிலும், சமூக அமைப்புகளிலும் இது குறித்த விழிப்புணர்வு வழங்கப்படவேண்டும். மக்களின் மனப்போக்கு மாறும்போது மட்டுமே இத்தகைய முயற்சிகள் நிலைத்துப் போகும். இயற்கையே நம்முடைய வாழ்வின் அடித்தளம். அதைக் காக்க அரசாங்கம் எடுத்துள்ள இத்தகைய தீர்மானங்கள் வருங்கால சந்ததிக்கான நம்பிக்கையை உருவாக்குகின்றன. பொலித்தீன் பைகளின் முடிவு என்பது ஒரு பொருளின் முடிவு அல்ல அது சுற்றுச்சூழல் விழிப்புணர்வின் ஆரம்பம்!




# இலங்கை அபிவிருத்தியடைய இந்தியா தொடர்ந்தும் உதவும்

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.14**
**இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா முழுமையான அர்ப்பணிப்பை வழங்கும் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

பண்டாரவளையில் இந்திய வீட்டுத் திட்டத்தின் வீட்டு உறுதி ஆவணங்களைப் பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- இந்தியாவால் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் பொறுப்புணர்ச்சியுடனான உதவிகளே. இது ஒரு குடும்ப உறுப்பினர்மீதான பொறுப்புணர்வுக்கு ஒத்ததாகும். வீடமைப்பு, கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரப் பராமரிப்பு, சமூக அபிவிருத்திபோன்றவற்றில் நாங்கள் கைகோர்த்தவாறு பணியாற்றிவருகின்றோம். இலங்கையில் நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி 65 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது- என்றார். (எ-க-இ)

# சட்டத்தரணி மீது தாக்குதல்; அதிகாரிக்கு பிணை

கொழும்பு, ஒக்.14
கல்கிசை நீதிமன்ற வளாகத்துக்குள் சட்டத்தரணியொருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.
கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோதே கல்கிசை நீதவான் பிணை அனுமதி வழங்கியுள்ளார். (எ-இ)

# செப்ரெம்பரில் 695.7 மில். வருவாய்

கொழும்பு, ஒக்.14
இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் 695.7 மில்லியன் அமெரிக்க டொலரை நாட்டுக்கு அனுப்பியுள்ளனர் என்று இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது.
கடந்த ஆண்டு இதே மாதத்தில் பெறப்பட்ட வெளிநாட்டுப் பணத்தை விடவும் இந்த ஆண்டு 140.1 மில்லியன் அமெரிக்க டொலர் அதிகம் கிடைத்துள்ளது. அதே வேளை இந்த ஆண்டின் இதுவரைவான காலப்பகுதியில் 5 ஆயிரத்து 811.7 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுப் பணம் கிடைத்துள்ளது. (ச-இ)

# மின்சாரசபை நட்டமடைந்தால் நிதி நிலைமைகள் தள்ளாடும்!

## ஐ.எம்.எப். எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.14
இலங்கை மின்சாரசபை தொடர்ந்து நட்டத்தை எதிர்கொண்டால் அது அரசாங்கத்தின் நிதி நிலைமை மோசமடையவும் பணவீக்கம் அதிகரிக்கவும் வரித்தேவைகள் பூர்த்தியாகாமல்போகவும் அல்லது கடன் வாங்கவேண்டிய நிலைமைக்கும் இட்டுச்செல்லும் என்று சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.
எதிர்காலத்தில் மின்கட்டணத்தைக் குறைக்கவேண்டுமானால், இப்போதைய கட்டண உயர்வும், மின்சாரசபையை நான்கு பிரிவுகளாகப் பிரிப்பதும் கட்டாயமாகும். மின்கட்டண அதிகரிப்புத் தொடர்பான நாணயநிதியத்தின் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் மதிப்பீடு செய்யப்படவுள்ளன. சர்வதேச நாணயநிதியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில், இலங்கை அரசாங்கம் எதிர்காலத்தில் மின்கட்டணத்தை கட்டாயமாக அதிகரிக்க வேண்டியிருக்கும் என்று கூறப்படுகின்றது. (ச-இ)

# 'லஞ்ச்சீற்றுக்கு' முற்றுப்புள்ளி!

கொழும்பு, ஒக்.14
எதிர்காலத்தில் 'லஞ்ச்சீற்' பாவனை முற்றாகத் தடை செய்யப்படும். பிளாஸ்ரிக் அல்லாத லஞ்ச் சீற்றுகள் அறிமுகப்படுத்தப்படும் என மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி முதல் பொலித்தீன் பைகளை இலவசமாக வழங்க முடியாது என நுகர்வோர் விவகார அதிகாரசபை அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.
பொலித்தீன் கொள்கலன் பைகளுக்கு நுகர்வோரிடமிருந்துவசூலிக்கப்படும்தொகையைப் பற்றுச்சீட்டில் குறிப்பிட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
புதன்கிழமை - புரட்டாதி 29
15.10.2025
சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

: 021 463 0000
: 021-463 ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம்; பரிந்துரைகள் இறுதிக்கட்டத்தில்!

*நீதியமைச்சர் தெரிவிப்பு*



**கொழும்பு, ஒக்.14**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் பணி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது என்று நீதித்துறை அமைச்சர் ஹர்ஷன நாண யக்கார தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்னவின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, இந்த பரிந்துரைகளை விரைவில் வழங்கவுள்ளது. இந்தப் பரிந்துரைகள் கிடைக்கும் தினத்தை இப்போதைக்குக் கூறமுடியாது என்றாலும், அவை மிக விரைவில் கிடைக்கும். நிகழ்நிலைக் கட்டுப்பாட்டுச்சட்டத்தை நீக்குவது குறித்த காலக்கெடுவை இப்போதைக்குக் கூறமுடியாது. அதற்காக நியமிக்கப்பட்ட குழுவைச் சந்தித்து, அதற்கான பணிகளைத் தொடங்க வேண்டியுள்ளதே இதற்குக் காரணம் - என்றார். (ச-இ)



## அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மாகாணசபைத் தேர்தல் நிச்சயம்

*அஜித் பி பெரேரா தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.14

மாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் மே அல்லது ஜூன் மாதமளவில் நிச்சயம் நடத்தப்படும். அதற்குரிய தேசிய, சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சட்டத்தரணி அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆளுநர்களின் ஆட்சிக்குப் பதிலாக மக்கள் பிரதிநிதித்துவம் மாகாணசபையில் நிலைநிறுத்தப்பட வேண்டும். தேர்தல் நடத்தப்படவேண்டியது ஜனநாயகப் பண்பாகும். அதற்குரிய ஏற்பாட்டை நாடாளுமன்றம் ஊடாக அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

எது எப்படி இருந்தாலும் புத்தாண்டுக்குப் பின்னர் மே அல்லது ஜூன் மாதமளவில் தேர்தல் நடத்தப்படுவதற்குரிய சாத்தியமே அதிகம் உள்ளது. அதற்குரிய அழுத்தம் தேசிய, சர்வதேச ரீதியில் விடுக்கப்பட்டுள்ளது. தேர்தலைப் பின்னடித்தால் அது அரசாங்கத்துக்கே பாதகமாக அமையும்.

மாகாணசபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை முன்வந்துள்ளனர். தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பார்கள். நாட்டு மக்களும் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துவதற்காக மாகாணசபைத் தேர்தலை எதிர்பார்த்துள்ளனர் - என்றார். (எ-44)

## அரசாங்கம் வீழ்ச்சியடைந்தால் நாட்டைப் பொறுப்பேற்கத் தயார்

*யானைக் கட்சியின் தவிசாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.14

இந்த அரசாங்கம் வீழ்ச்சியடைந்தால், நாட்டைப் பொறுப்பேற்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவுள்ளது என்று அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொய்யுரைக்கும் அரசியலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும், நாட்டுக்காக பொதுவான தொரு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கும் நாட்டு மக்கள் முன்வந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றின் இணைந்த பயணம் தொடர்பில் நாளை புதன்கிழமை நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் முகாமைத்துவக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டு, சாதகமான முடிவு எடுக்கப்படும்.

ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பயணத்தைவிட சிறப்பான பயணத்தை இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்க முடியாது என்பதே எனது கருத்தாகும். நாம் கொண்டுவந்த சட்டதிட்டங்கள் மீறப்பட்டுவருகின்றன. அப்படியானால் அரசின் வீழ்ச்சி ஆரம்பமாகின்றது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் நாட்டை ஐ.தே.க. பொறுப்பேற்கும் - என்றார். (க-44)

## மருத்துவமனைகள் நிரம்ப வீதி விபத்துகளே காரணம்

*அமைச்சர் நளிந்த சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஒக்.14

நாட்டில் அதிகளவானோர் திடீர் விபத்துகள் காரணமாகவே மருத்துவ மனைகளில் சேர்க்கப்படுகின்றனர். இதுதொடர்பில் பொது விழிப்புணர்வு அவசியம் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

விபத்துகள் தடுக்கக்கூடியவை, தவிர்க்கக்கூடியவை. ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியுடன் முன்னேறிச்செல்லும் போது, விபத்துகளைத் தடுப்பதற்கான தலையீடுகள் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு அம்சத்திலும் செய்யப்பட வேண்டும்.

பொதுமக்களுக்கு அறிவுறுத்தி, சுகாதார ஊழியர்களை அதில் இணைத்து தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தி, திடீர் விபத்துகளால் மருத்துவ அமைப்பில் ஏற்படும் தாக்கத்தைக் குறைக்கவேண்டும்- என்றார். (ச-இ)



## 'அதிக விதிமுறை, அதிக சம்பளம்' அணுகுமுறையை மாற்றவேண்டும்

*மனோ எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, ஒக்.14

ஜனாதிபதியின் மலையக மக்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். எனினும் பழைய அணுகுமுறையையே பின்பற்றின் அதைப் புதியதாகக் கருதமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் சம்பள உயர்வு தொடர்பில் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அடிப்படை ஊதியம் மட்டுமே ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கு உட்பட்டது. பல்வேறு கொடுப்பனவுகள் ஈ.பி.எப்.க்குப் பொருந்தாது என்பதும் உண்மை.

இதில் தற்போது ஆயிரத்து 350 ரூபாவாக உள்ள அடிப்படைச் சம்பளம் உயர்த்தப்படுமா? அல்லது அந்த உயர்வு விதிமுறைகள், வருகை மற்றும் பிற ஊக்கத்தொகைகள் போன்ற கூடுதல் கொடுப்பனவுகளின் மூலம் மட்டும் வழங்கப்படுமா?

தொழிலாளர்கள் அதிக விதிமுறைகளைப் பூர்த்திசெய்தால், அதிக சம்பளம் வழங்க பெருந்தோட்ட முதலாளிகள் தயாராக உள்ளனர். அவர்களின் சூத்திரம் "அதிக விதிமுறைகள், அதிக சம்பளம்". ஜனாதிபதியின் புதிய சூத்திரமும் இதே அணுகுமுறையைப் பின்பற்றினால், அது புதியதாகக் கருதமுடியாது - என்றார். (ச-இ)

## ரணில் - சஜித் இணைவது காலத்தின் கட்டாயமாம்!

கொழும்பு, ஒக்.14

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவது காலத்தின் கட்டாயம். இது இதற்கு முன்னரே நடந்து இருக்கவேண்டும். அவ்வாறு நடந்து இருந்திருந்தால் அனைவருக்கும் நன்மை பயக்கும் பல விடயங்கள் நடந்திருக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த காலங்களில் இரு தலைவர்கள் மத்தியிலும் காணப்பட்ட தலைமைத்துவம் உள்ளிட்ட சில முக்கிய விடயங்களில் விட்டுக்கொடுப்பற்ற நிலைமையால், இணையும் முயற்சிகள் கைகூடாமல் போயிருந்தன.

இணைந்திருந்திருந்தால் முன்பு நடைபெற்ற பல்வேறு தேர்தல்களில் பல வெற்றிகரமான சம்பவங்களைச் சந்தித்திருக்கலாம். தற்போது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட பேச்சுகளை முன்னெடுத்து இரு தரப்பினரும் இணைந்து செயற்படவேண்டும். அதை நாம் முழுமையாக வரவேற்கின்றோம். அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்குவதற்குத் தயாராகவே உள்ளோம். இது விரைவிலேயே நடைபெற வேண்டும் - என்றார். (க-இ)

## ஐ.தே.க.வுடன் இணைவு ஆராயக் குழு நியமனம்!

கொழும்பு, ஒக்.14

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து எவ்வாறு செயற்பட முடியும் என்பது குறித்த முன்மொழிவைத் தயாரிப்பதற்காக நான்கு பேர் கொண்ட குழுவொன்றை ஐக்கிய மக்கள் சக்தி நியமித்துள்ளது என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐ.தே.க.வுடன் இணைந்து செயற்படுவதற்கான செயன்முறையை ஆராய்ந்து, ஒரு முன்மொழிவை உருவாக்குவதே இந்தக் குழுவின் நோக்கமாகும். இந்தக் குழுவில் கபீர் ஹாஷிம், எஸ்.எம். மரிக்கார், முஜிபுர் ரஹ்மான், எரான் விக்ரமரத்ன ஆகியோர் உள்ளடங்குகின்றனர் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கொழும்பு - 04 இல் உள்ள பிரபல கட்டட நிறுவனத்திற்கு BCT அல்லது NCT தகமையுடன் தொழில்நுட்ப உதவியாளர்கள் (Technical Officer) தேவை. தங்குமிட வசதியுடன் உடனடி வேலைவாய்ப்பு

தொடர்புகளுக்கு:- 077 799 4418

(CS/46486) J-1


## 11 ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 01 . 1947



மறைவு 14 . 10 . 2014

**அமரர் கந்தையா நயினார்**

**திதி – 14.10.2025**

**இமைகள் மூடித்
திறப்பதற்குள் வருடம்
பதினோராகி விட்டது
நாம் வாழும் நாட்களில்
உம் நினைவுகள் – எம்முடன்
என்றென்றும் வாழும்
நீங்கா நினைவுகளுடன்....**

இல. 05, 5 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர்

### தேசியமட்ட கோலூன்றிப் பாய்தல்

# அளவெட்டி அருணோதயவுக்கு இரண்டு தங்கப்பதக்கங்கள்!







யாழ்ப்பாணம், ஒக்.14

தேசிய மெய்வல்லுநர் போட்டியின் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவிகள் தங்கப்பதக்கங்களைச் சுவீகரித்துக்கொண்டனர்.

18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மாணவி பி.சண்முகப்பிரியா 2.60 மீற்றர் தூரம் பாய்ந்தும் 20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மாணவி எஸ்.நிருசிகா 3.30 மீற்றர் தூரம் பாய்ந்தும் முதலிடம் பெற்றனர்.

இந்தப் போட்டிகள் தியகமவில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-66)

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரியர் கலா
சாலையின் பிரதி அதிபர் (கல்வி)
**திரு த. கோபாலகிருஷ்ணன்**
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
**தங்கராசா தவநாயகி**
அவர்கள் நேற்று (13.10.2025)
திங்கட்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு
துயரடைவதுடன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

தோற்றம் 15.06.1946 மறைவு 13.10.2025

விரிவுரையாளர் கழகம்
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

# ஐ.ம.ச., ஐ.தே.க.வுடன் கூட்டிணையமாட்டோம்

### பெரமுன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.14

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றுடன் அரசியல் ரீதியிலான கூட்டுப்பயணம் கிடையாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். மொட்டுக்கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார். ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன ஒருமித்தக் கொள்கையுடைய கட்சிகளாகும். அந்தத் தரப்புகள் இணைவது பிரச்சினை இல்லை. அதனை வரவேற்கின்றோம். ஆனால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் கொள்கை தனித்துவமானது. ஒற்றையாட்சி, தேசியப் பொருளாதாரம் என்பவற்றை மையப்படுத்தியது. எனவே, மேற்படி தரப்புகளுடன் அரசியல் ரீதியில் எமக்குக் கூட்டுக்கிடையாது. ஆனால் ஜனநாயகம் மற்றும் எதேச்சதிகாரத்துக்கு எதிராக எதிரணியாக ஒன்றிணைந்து செயற்படக்கூடிய இடங்களில் ஒன்றிணைவோம். மாறாக அரசியல் ரீதியில் கூட்டுக்கிடையாது- என்றார். (ச-44)

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 06 . 1942



மறைவு 13 . 10 . 2025

**தாமோதரநாதன் குணபாக்கியம்**

தொல்புரம் சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், நெல்லியான் மற்றும் 544/1 மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரநாதன் குணபாக்கியம் அவர்கள் நேற்று (13.10.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - சேதுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சிவகொழுந்து நாதன் - சிதம்பரம் தம்பதியரின் மருமகளும், தாமோதரநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தேவராசா, சிதம்பரநாதன், லோகேஸ்வரி, வரதராஜா மற்றும் கதிர்காமநாதன், சிவப்பிரகாசம், லிங்கேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் உமா, உஷா, கவிதா ஆகியோரின் தாயாரும், கரிகாலன், ஜெயரூபன், ரவிக்குமார் ஆகியோரின் மாமியாரும், டஷினியா, ரிஷிவர்மன், ஹரிஸ், ஆகேஸ், ஆதி, அபி ஆகியோரின் பேர்த்தியும், பிரகதியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2025) செவ்வாய்க்கிழமை 544/1 மானிப்பாய் வீதி, ஓட்டுமட இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓட்டுமடம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
**077 630 0370**
**077 300 2510**

தகவல்:
குடும்பத்தினர்

(CS/59647) J-1

## ஓராண்டு ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 06 . 06 . 1961



மறைவு 24 . 09 . 2024

**அமரர் - திரு. முருகேசு சேரமுகன்**

(ஓய்வு பெற்ற யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்)

**திதி - தேய்பிறை அஷ்டமி**

அப்பா நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஒரு வருடங்கள் ஆகிவிட்டன.ஆனாலும்
நீங்கள் எங்களுடன் இருப்பதைப் போல
தான் உணருகிறோம். உங்களை இழந்தது
ஒரு கனவு போல இருக்கிறது அப்பா!
நீங்கள் எங்களுடன் ஒரு நண்பனைப்
போல் நல் வழிகாட்டியாகவும், நல்ல
கணவனுக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும்,
ஒரு தந்தைக்கு சிறந்த
முன்னுதாரணமாகவும் விளங்கியுள்ளீர்கள்
நீங்கள் சொன்ன அனைத்தும் நன்றாக
நினைவிருக்கிறது அப்பா! எம் கடமை
யாதேனில் அதை பின்பற்றி உங்களுக்கு
பெருமை சேர்ப்பதே அப்பா!!!

அன்புடன் பிள்ளைகள்

(CS 30588) D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பணிகள் முன்னேற்றம் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.14

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின்கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கலந்துரையாடலில் திணைக்களங்க ளின் ஒவ்வொரு திட்டங்களினதும் முன்னேற்றங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. ஒப்பந்தக்காரர்களால் சில இடங்களில் வேலைகளில் ஏற்பட்டுள்ள தாமதங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. (ச-25,113)






சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வேலணைப் பிரதேச செயலகத்தினால் புங்குடுதீவு சுப்பிரமணியம் மகளிர் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (ச-25, 9)

# மாந்தை மேற்கில் முதியோர்தின விழா



மன்னார். ஒக்.14

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் சிரேஷ்ட முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில், முதியோர் தினநிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது 60 வயதுக்கு மேற்பட்ட நீண்டகாலமாக முதியோர் சங்கத்துடன் இணைந்து செயற்பட்ட மூன்று சிரேஷ்ட பிரஜைகள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் கே.அரவிந்தராஜ் , பிரதேசசபையின் தவிசாளர், அடம்பன் மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர், இலங்கை வங்கி முகாமையாளர், அடம்பன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,56)





புகைப்படக் கலைஞர் தர்மபாலன் திலக்சனின் புதிய 'கடந்த கால நிழல்கள்' புகைப்படக் கண்காட்சி யாழ்ப்பாணம், கலாசார மையத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சி இலங்கையின் உள்நாட்டுப் போருக்குப் பிறகு நிலம், வீடுகள், மக்களின் நினைவுகளில் பதிந்த காயங்களையும், நினைவுகளையும் பதிவுசெய்துள்ளது. (எ-25,20)


## MUNICIPAL COUNCIL, JAFFNA

### INVITATION FOR BIDS

### PROCUREMENT FOR SUPPLYING OF STRRET LIGHT WITH FITTING ACCESSORIES - 2025 - III

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Mayor/Commissioner, Jaffna Municipal Council. TP: 021-2217691/021 222 2275, Fax: 021 222 2334 E-Mail: pmdjaffnamc@gmail.com office hours from 09:00 hrs. To 15:00 hrs.
4. In these quotations are limited suitable business or company registrations and shall not include black list tenders.
5. **bidders shall also register themselves with the registrar of public contract Sri Lanka, in terms of the public contract Act No 03 of 1987.** Additional details are provided in the bidding document.
6. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from **15th Oct 2025 until 28th Oct 2025 from 09:00 hrs. to 14:00 hrs.** on the submission of a written application and upon a payment of non-refundable fee. The payment method will be paid by cash or bank draft drawn in favor of **Commissioner, Jaffna Municipal Council.**
7. Bids must be delivered to the address given below on or before **29th Oct 2025 at 10.30 hrs.** Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
8. A pre bid meeting will be held at Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **23rd oct 2025** at 11:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
9. The address referred to above is **Chairman, Procurement Committee, Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna.** The Bid Name & No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.

| S/N | Bid No. | Tittle of the procurement | Estimated Amount (Without VAT) Rs. million | Period of Contract | Bid Validity Period | Bid Security | | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount | Required Period | |
| 01 | JMC/PMD/02/ STREET LIGHT WITH FITTING ACCESSORIES - 2025 - III | PROCUREMENT FOR SUPPLYING OF STREET LIGHT WITH FITTING ACCESSORIES - 2025 - III | 15.0 | 60 days | 77 days | 150,000.00 | 10.02.2026 | 3,500.00 |

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Municipal Council, Point Pedro Road,**
**Nallur, Jaffna.**
**14.10.2025**

(CR 40494) E


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

**077 334 1281**


## பெயர் மாற்றம்

மிருசுவில் வடக்கு மிருசுவிலில் வசிக்கும் கதிரித்தம்பி சரஸ்வதி ஆகிய நான் எனது பெயரை கதிரித்தம்பி சரஸ்வதிப்பிள்ளை என மாற்றம் செய்கின்றேன்.

**கதிரித்தம்பி சரஸ்வதிப்பிள்ளை**



# குருசாமி வித்தியில் பரிசில்நாள் நிகழ்வு

கொடிகாமம், ஒக். 14

கைதடி குருசாமி வித்தியாலயத்தின் பரிசில் நாள் நிகழ்வு அதிபர் ச.அகிலன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி இவ்வோன் லெரின் லியன், சிறப்பு விருந்தினராக கைதடி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ம.விஜிகரன், கௌரவ விருந்தினராக அப்பாக்குட்டி நம்பிக்கை நிதிய உறுப்பினர் திருமதி சிவமணிதேவி பாலச்சந்திரன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 159)





"சூழலை பாதுகாப்போம்"
சூழல் பாதுகாப்பு ஓவிய போட்டி 2025

மூன்று வயது பிரிவுகளில் இடம்பெறும் போட்டிகளில் 5 வயது முதல் 18 வயது வரையான எந்தவொரு மாணவரும் பங்கேற்க்கலாம்.

வயது 05-09 | வயது 10-14 | வயது 15-18

SAVE THE PLANET

"சூழலை காப்போம்" எனும் தொனிப்பொருளின் கீழ் 18"x14" போஸ்டர் அளவில் வரைந்த ஓவியங்களை அருகிலுள்ள **எல் பீ ஃபினான்ஸ் கிளையில்** ஒப்படைக்கவும்.

**ஆக்கங்களை பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 30 நவம்பர் 2025**

வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசுகளுடன்

போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் பெறுமதி வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் தகவல்களுக்கு
0112 200 200

LB FINANCE




# தீவகம் லயன்ஸ் கழகத்தால் வெள்ளைப்பிரம்பு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி கருவி நிறுவனத்தைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்குப் புதிய வெள்ளைப் பிரம்புகள் மற்றும் அன்பளிப்புகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

தீவகம் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன், கருவி நிறுவனத்தின் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் கல்வியங்காடு மூன்றாம் கட்டையில் அமைந்துள்ள நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு வளாகத்தில் நிகழ்வு நடைபெற்றது. (எ-25,66)



யாழ்.மேலதிக அரசாங்க அதிபராக பதவியுயர்வு பெற்ற கைலாயபிள்ளை சிவகரனுக்கு கொக்குவில் மக்களால் பாராட்டு விழா குளப்பிட்டி மங்களா மகா காளி ஆலய முன்றலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (எ-41)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 7 பணயக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்!

லண்டன், ஒக்.14

மத்திய கிழக்கில் பணயக்கைதிகள் மற்றும் கைதிகளைப் பரிமாறிக்கொள்ளும் செயன்முறையின் முதற்கட்டமாக 7 பணயக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு செஞ்சிலுவைச் சங்கத்திடம் நேற்றுக் கையளித்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, இஸ்ரேலிய அமைச்சரவை ஆயிரத்து 718 பலஸ்தீனக் கைதிகளை விடுவிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. முன்னர் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை ஆயிரத்து 722 ஆகக் காணப்பட்டாலும், தற்போது அந்த எண்ணிக்கை ஆயிரத்து 718 ஆகத் திருத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

காஸாப் பகுதியில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான விரிவான அமைதித்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தக் கைதிகள் பரிமாற்றம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### ஹமாஸ் தாக்குதலில் இறந்த

## காதலியின் பிரிவைத் தாங்காது உயிர்நீத்த இஸ்ரேலியர்!

லண்டன், ஒக்.14



ஹமாஸ் அமைப்பின் தாக்குதலில் தனது காதலியை இழந்த நபர் ஒருவர் காதலியின் இரண்டாவது ஆண்டு நினைவுநாளுக்குச் சில தினங்கள் முன்னதாக தனது உயிரைமாய்த்துக்கொண்ட சம்பவம் ஒன்று நடந் துள்ளது.

இஸ்ரேலில் 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இசைவிழா ஒன்றின் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதலில், 28 வயதான ரோய் ஷாலேவ், தனது காதலியான 25 வயது மாபல் ஆடம் மற்றும் அவரது நண்பர் ஹிலி சாலமனை இழந்தார்.

சில தினங்களுக்கு முன்னர் இஸ்ரேலின் நெதன்யா அருகில் நெடுஞ்சாலை ஒன்றில் தீப்பற்றிய காருக்குள் இருந்து ரோய் ஷாலேவ் சடலமாக மீட்கப்பட்டார்.

இறப்பதற்கு முன்னர் ரோய் ஷாலேவ் தனது சமூக வலைத்தளப்பக்கத்தில் பதிவொன்றைப் பதிவிட்டுள்ளார். "நான் உண்மையிலேயே வருந்துகிறேன். இந்த வலியை இனி என்னால் தாங்கமுடியாது, என் வாழ்க்கையில் ஒருபோதும் இவ்வளவு வலியையும் துன்பத்தையும் உணர்ந்ததில்லை, இந்தத் துன்பம் முடிவுக்கு வரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். நான் உயிருடன் இருக்கிறேன் ஆனால் நான் ஏற்கனவே இறந்துவிட்டேன்" என்று அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)




## மதுச்சாலையில் சூடு நால்வர் துடித்துப்பலி

நியூயோர்க், ஒக்.14

அமெரிக்காவில் தெற்கு கரோலினாவில் உள்ள செயின்ட் ஹெலினா தீவுப் பகுதியில் உள்ள மதுச்சாலை ஒன்றில் நேற்றுமுன்தினம் காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

உணவகத்துடன் கூடிய மதுச்சாலைக்குள் நுழைந்த சிலர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் தெரியவரவில்லை. இதுதொடர்பான விசாரணைகள் அந்தநாட்டுப்பொலிஸாரால்முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. (எ-இ)



## இஸ்ரேல் சென்றடைந்த ட்ரம்ப்

நியூயோர்க், ஒக்.14

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று இஸ்ரேல் சென்றடைந்தார். பென் குரியன் விமான நிலையத்தில் தரையிறங்கிய டொனால்ட் ட்ரம்ப்பை, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வரவேற்றார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

## பிலிப்பைன்ஸ் கப்பலை இலக்குவைத்த சீனக்கடற்படை


மணிலா, ஒக்.14

தென்சீனக் கடலில் பிலிப்பைன்ஸ் நாட்டின் கப்பலை சீனக் கடற்படை தாக்கிச் சேதப்படுத்தியுள்ளது என்று பிலிப்பைன்ஸ் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

சீனக் கப்பல்கள் வலுவான தண்ணீர்ப் பீரங்கியைப் பயன்படுத்தி பிலிப்பைன்ஸ் கப்பலைத் தாக்கியுள்ளன என்றும், அதில் கப்பல் சேதமடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, இந்தச் சம்பவத்தால் கப்பலில் இருந்தவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படவில்லை என்றும் பிலிப்பைன்ஸ் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (எ-இ)





## இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்றார் கிராஸ்னாஹோர்காய்

வொஷிங்டன், ஒக்.14

2025ஆம் ஆண்டுக்கான இலக்கியத்துக்கான நோபல் பரிசை ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த லாஸ்லோ கிராஸ்னாஹோர்காய் வென்றுள்ளார்.

இவரது முதல் நாவல் 'சாட்டன்டாங்கோ' கடந்த 1985ஆம் ஆண்டு வெளியானது. இவர் எழுதிய 'ஸ்பேட்வொர்க் பார் ஏ பேலஸ்: என்ட்ரிங் தி மேட்னஸ் ஆப் அதர்ஸ்' என்ற சிறுகதையும் பிரபலம் அடைந்தது. இவரது படைப்புகள் அனைத்தும் தொலைநோக்கு கொண்டவை. தீவிரவாதம் அழிவை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சூழலில், இவரது படைப்புகள் கலையின் சக்தியை வெளிப்படுத்துகின்றன. இதற்காக இவருக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய ஐரோப்பியப் பாரம்பரியத்தில் வந்த மிகச்சிறந்த இதிகாச எழுத்தாளராக இவர் கருதப்படுகிறார். (ச-இ)



## ட்ரம்புக்குப் பதக்கம் வழங்கி அழகு பார்க்கவுள்ள இஸ்ரேல்

ஜெருசலேம், ஒக்.14

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு, ஜனாதிபதி கௌரவ பதக்கம் வழங்கப்படும் என்று இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சோக் அறிவித்துள்ளார்.

காஸா போர் நிறுத்தத்தில் மத்தியஸ்தம் செய்த அமெரிக்கத் தலைவரின் பங்கை அங்கீகரிப்பதற்காகவும், பணயக் கைதிகளை விடுவிப்பதை உறுதிசெய்ததற்கும் இந்த விருது வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பதக்கம் இஸ்ரேலுக்கோ அல்லது மனித குலத்துக்கோ சிறந்த பங்களிப்பைச் செய்த நபர்களுக்கு வழங்கப்படுகிறது. நெசெட் கூட்டத்தில், ட்ரம்புக்குப் பதக்கம் வழங்குவதற்கான தனது முடிவை ஜனாதிபதி ஹெர்சாக் முறைப்படி அறிவிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இஸ்ரேலிய ஜனாதிபதி கௌரவப் பதக்கத்தை ட்ரம்புக்கு வழங்குவது ஒரு "பெரிய மரியாதை" என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகாவின்...

ளது. இறுதிப்போரின்போது வெள்ளைக் கொடிகளுடன் வந்தோரை சுட்டுக் கொல்லுமாறு கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டார் என்றும், புலிகளுக்கு மஹிந்த ராஜபக்ச பணம் வழங்கினார் என்றும் பொன்சேகா அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றார். இந்த விடயம் தொடர்பில் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகரவிடம் ஊடகவியலாளர்கள் வினவியுள்ளனர்.

இதன்போதே, பொன்சேகா யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவரின் நோக்கம் என்ன? என்று மக்களுக்குத் தெரியும். எனவே இந்த விடயத்தில் கருத்துக்கூறவேண்டிய அவசியம் பொதுஜன பெரமுனவுக்கு எழவில்லை என்று சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## செம்மணி...

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளன. இதுவரை 240 என்புத் தொகுதிகள் அவதானிக்கப்பட்ட நிலையில், அவற்றில் 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பட்ஜெட் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள நிலையில், வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நேற்று நடைபெற்றன. இதன்போது, மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 19 மில்லியன் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என்ற விடயம் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளை ஆரம்பிப்பது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்காக, நீதவான் லெனின்குமார், சட்ட மருத்துவ அதிகாரி உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் செம்மணிப் புதைகுழிப் பகுதிக்குக் களப்பயணம் மேற்கொண்டனர்.

கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் கனமழை காரணமாக, அந்தப் பகுதியில் நீர்தேங்கி நிற்பதால் அகழ்வுப் பணிகள் தொடர்பில் எந்தத் தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இந்த நிலையில், வழக்கு நவம்பர் மாதம் 3ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

## ஹெரோய்னுடன்...

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர் 29 வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து 5 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## சடலமாக...

பெண் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியைச் சேர்ந்த, 2 பிள்ளைகளின் தாயாரான சுரேஷ்குமார் குலதீபா (வயது -36) என்ற பெண்ணே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார். சடலத்தின் மீதான உடற்கூற்றுப் பரிசோதனைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இரவு முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, அந்தப் பெண் கல் அல்லது அது போன்ற பொருளால் தலையில் பலமாகக் குத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரது முகத்தில் எரியக்கூடிய திரவமொன்று ஊற்றப்பட்டு தீவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண் வீட்டை விட்டு புறப்பட்ட போது, 10 பவுண் நகைகளை அணிந்து சென்றுள்ளார். எனினும், சடலத்தில் நகைகள் காணப்படவில்லை. அவர் வீட்டை விட்டு புறப்பட்டபோது, சிலருடன் இணைந்து வவுனியாவுக்குச் செல்வதாகக் கணவரிடம் கூறியுள்ளார். எனினும், தனது கணவரிடம் குறிப்பிட்டுக் கூறியவர்களுடன் அவர் செல்லவில்லை என்பது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-28-26)

## பல்வேறு...



கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ண தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் பொலிஸார் கடந்த மூன்று நாட்களாக சில இடங்களில் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டனர். இதன்போது, ஐஸ் போதைப்பொருள், கஞ்சா, கசிப்பு மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு உள்ளிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 14 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் இருவர் மேல் நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் - என்றார். (அ-ம-20)

## இடமாற்றக்...

ஆசிரியர் சங்கத்தினர் நேற்றுக்காலை வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கஷ்டப் பிரதேசம், அதி கஷ்டப்பிரதேசம் ஆகியவற்றில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் சரியான முறையில் வகுக்கப்படவில்லை. இது தொடர்பில் மாகாண கல்விப் பணிப்பாளருக்கும், மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் எழுத்து மூலமாக அறிவித்திருந்தும் எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாறாக, முறைப்பாடுகளை வழங்கிய ஆசிரியர்கள் அவமதித்து அனுப்பப்பட்டனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தால் கொண்டுவரப்படும் முறையீடுகளைப் பரிசீலிப்பதற்குத் தயார் என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே, இந்த விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினைகள் சீர்செய்யப்பட வேண்டும். இல்லையேல் போராட்டம் தொடரும் என்றனர்.

இதைத் தொடர்ந்து, ஆசிரியர்கள் ஆளுநர் அலுவலகம் முன்பாகவும் போராட்டத்தை முன்னெடுத்ததுடன், மனுவொன்றையும் கையளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-20-26)

## அபிவிருத்தி...

கோரி வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:-

வெளிமாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாங்கள், வடக்கு மாகாணத்தில் மிக நீண்டகாலமாகப் பணியாற்றி வருகின்றோம். எம்மை எமது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்ய வேண்டிய பணிக்காலம் கடந்துள்ள நிலையில், இன்றளவும் இடமாற்றங்களை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றனர். சொந்த மாவட்டத்தில் சேவை செய்கின்ற அரச அலுவலர்கள் தமக்கு வருமானம் போதாது என்கின்ற நிலையில், வெளிமாவட்டத்தில் பணியாற்றும் எமக்கு எவ்வாறு ஊதியம் போதக்கூடிய வகையில் இருக்கும்?. அத்துடன், சில அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில், எமக்கு இடமாற்றம் வழங்காமல் இழுத்தடித்து வருவதை ஏற்க முடியாது - என்றனர். (அ-ம-26-20)

## வீடொன்றுக்குள்...

சண்டிலிப்பாய் வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை அத்துமீறி நுழைந்த வன்முறைக்குழு, வீட்டை அடித்து உடைத்துச் சேதப்படுத்தியதுடன் ஓட்டோ, மோட்டார்சைக்கிள் உள்ளிட்டவற்றையும் தீக்கிரையாக்கியுள்ளது. முகமூடிகளை அணிந்தவாறு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வரைக் கொண்ட குழுவினரே இந்த வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வன்முறைக் குழுவினரால், வீட்டு முற்றத்தில் வைத்து ஓட்டோ தீக்கிரையாக்கப்பட்டதுடன், வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. பின்னர் அந்த மோட்டார் சைக்கிள் வீட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர்களுக்கு அப்பால் உள்ள மாகியப்பிட்டிச் சந்தியில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-66-26-20)





## ரயிலுடன்...



தலைவர் ஒருவர் உயிரிழந்தார். கிளாலியைச் சேர்ந்த நவனீதராசா (வயது-50) என்ற நபரே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி பளை இத்தாவில் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வேம்பொடுகேணியில் பயணிகளை இறக்கி விட்டுத் திரும்பும்போதே, ஓட்டோ விபத்தில் சிக்கியதாக நம்பப்படுகின்றது. விபத்தில் ஓட்டோவின் முன்பக்கம் ரயிலால் தகர்க்கப்பட்ட நிலையில், ஓட்டோவின் சாரதி சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அத்துடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-9)

## மோ.சைக்கிளால்...

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த எட்மன் மரின் (வயது-27) என்ற கால்பந்தாட்ட வீரரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மோட்டார்சைக்கிளில் பயணித்த அந்த இளைஞர், முன்னால் சென்ற வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்டபோது நிலைதடுமாறி வீழ்ந்துள்ளார். இதன்போது பின்னால் வந்த பேருந்து அவர் மீது ஏறியதில் இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பேருந்துக்குப் பின்னால் சென்றுகொண்டிருந்த ஓட்டோவொன்று, அந்த விபத்தைத் தவிர்ப்பதற்காக சடுதியாகத் திருப்பப்பட்டபோது, அது தடம்புரண்டு வயலுக்குள் பாய்ந்துள்ளது. எனினும், ஓட்டோவில் இருந்த எவருக்கும் உயிராபத்து ஏற்படவில்லை. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-28-26-113)

## திஸ்ஸ...

புத் தெரிவித்து, காணிகளின் உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 6.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

விகாரையில் இடம்பெற்ற உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக தென்னிலங்கையிலிருந்து அழைத்து வரப்பட்ட பிக்குமார்கள், சிங்கள மக்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர், எதிர்ப்புப் போராட்டம் காரணமாக மாற்றுப் பாதை ஊடாக விகாரையை நோக்கிச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு விட்டுப் பின்னர் அதேபாதையால் திரும்பிச் சென்றனர்.

போராட்டம் காரணமாகத் தையிட்டி திஸ்ஸ விகாரைச் சூழலிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் புலனாய்வாளர்களும் கண்காணிப்பில் ஈடுபட்டனர். (அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதிகளுக்கு சிறப்பு வசதிகள் வழங்கும் உத்தரவு வேண்டாம்

## நீதிச்சேவை ஆணைக்குழு நீதிபதிகளுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.14

சந்தேகநபருக்கோ அல்லது கைதிக்கோ சிறப்புப் பாதுகாப்பை வழங்குவது தொடர்பில் நீதிவான்கள் உத்தரவு பிறப்பிக்கக்கூடாது என நீதிச்சேவைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மற்றும் சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகள் தொடர்பாக சிறப்பு சூழ்நிலைகளில் நீதிமன்ற உத்தரவுகளைப் பிறப்பிக்கும்போது நீதிவான்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பாகநீதிச் சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு சந்தேகநபரையோ அல்லது கைதியையோ சிறையில் உள்ள காலப்பகுதியில் அவர்களின் குடும்பங்களின் சிறப்பு நிகழ்வுகளில் கலந்துகொள்ள அல்லது வேறு எந்தநோக்கத்துக்காகவும் சிறையிலிருந்து அவர்களின் வீடுகள் அல்லது பிறஇடங்களுக்கு அழைத்துச் செல்ல நீதிவான்கள் உத்தரவுகளைப் பிறப்பிக்கக்கூடாது.

நெருங்கிய இரத்த உறவினர்களின் இறுதிச் சடங்குகளின்போதுகூட, சிறைச்சாலைத் திணைக்களத்தின் உத்தரவுகள் மற்றும் விதிமுறைகளின்படி சிறைச்சாலை கண்காணிப்பாளரின் வழிகாட்டுதலின்கீழ் சந்தேகநபர்கள் மற்றும் கைதிகள் தேவையான இடங்களுக்கு அழைத்துச்செல்லப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஊற்றுப்புலம் கிராமத்தின் விவசாயத்தைக்காப்பாற்றுக

## விவசாயிகள் கோரிக்கை



கிளிநொச்சி, ஒக்.14

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஊற்றுப்புலம் குளத்தை அபிவிருத்தி செய்து நீர்த்தேக்கத்தைப் பாதுகாக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது-

ஊற்றுப்புலம் கிராமம் வினைத்திறனான நீர்ப்பாசன முறையால் விவசாயம் நடத்தும் கிராமமாகக் காணப்பட்டது. ஆனால் 2012ஆம் ஆண்டுக்குப் பின் அதிகளவான குழாய்க்கிணறுகள் அமைக்கப்படுவதால் ஊற்றுப்புலம் கிராமத்தில் வறட்சி அதிகரித்து. மரங்கள் மற்றும் செடிகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்ந்தால் ஊற்றுப்புலம் கிராமம் பாலைவனமாக மாறும் அபாயம் ஏற்படும். இதனால் விவசாயிகள் முழுமையாக விவசாயத்தைக் கைவிடவேண்டிய நிலை உருவாகும். எனவே ஊற்றுப்புலம் கிராமத்தின் பொருளாதார, சற்றுச்சூழல் மற்றும் எதிர்காலத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, விவசாயி களின் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகளை முழுமையாகப் பரிசீலித்து. அதற்கேற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவேண்டும் - என்றனர். (ச-113)

**A/L வரலாறு 2K25 மாபெரும் கருத்தரங்கு**

காலம் இம்மாதம் 15 ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில் (புதன், வியாழன், வெள்ளி, சனி)

• இடம் : D.M.I, ஆரியகுளம் சந்தி, யாழ்நகர்
• நேரம் : பிற்பகல் 2 மணிமுதல் 5.30 வரை

உங்கள் முதல்நிலை வரலாற்றாசிரியர்
M.பத்மன் B.A (Hons) History, M.A (History), M.E.D (O.U.S.L)

தொடர்புகளுக்கு: 077 482 5587

எதிர்பார்க்கை வினாக்களை அடிப்படையாகக் கொண்டது



# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய ஹன்ரர் பறிமுதல்

யாழ்ப்பாணம், ஒக்.14

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிக்கொண்டிருந்த சிறிய ரக ஹன்ரர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டது.

சட்டவிரோதமாக மணல் கடத்தல் இடம்பெறுகின்றது என யாழ்ப்பாண பிரதான பொலிஸ் பரிசோதகர் பாலித்த செனவிரட்னவுக்குத் தகவல் கிடைத்தது. அதனையடுத்து அவரது பணிப்புரைக்கு அமைவாக குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் இலக்கத்தகடற்று மணல் ஏற்றிக்கொண்டிருந்த வாகனத்தைக் கைப்பற்றினர். சம்பவம் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-27)

**சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடாத்தும் திருமந்திரப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்-2025**

எதிர்வரும் 04.11.2025 நடைபெறும் திருமூலர் குருபூசையை முன்னிட்டு திருமந்திரப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

இப்போட்டி அறநெறிப் பாடசாலைகளை வளர்க்கும் விதத்தில் நடாத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

யாழ் மாவட்ட அறநெறிப்பாடசாலைகள் அனைத்தும் இதில் பங்குபற்றலாம். விண்ணப்பங்கள் சுயவிபரக் கோவையுடன் அறநெறிப் பாடசாலை ஆசிரியரின் பரிந்துரையுடன் 20.10.2025 க்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேவையான விபரங்களை இணைத்துள்ளோம். மேலதிக தகவலுக்கு சைவ வித்தியா விருத்திச்சங்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

பரீட்சை நடைபெறும் திகதி : 02.11.2025 காலை 9.00 மணி

தலைவர்
கலாசாலை வீதி
சைவ வித்தியா விருத்திச் சங்கம்
திருநெல்வேலி.
021 222 6525

அறநெறி மாணவர்களுக்கான திருமந்திரப்போட்டி- 2025

ஆரம்ப பிரிவு
தரம் 01-03
5 திருமந்திரங்கள்
1.அன்பும் சிவமும்...
2.யாவர்க்குமாம் இறைவர்க்கு..
3.சிவ சிவ என்கிலார்...
4.ஒன்றவன் தானே...
5.படமாடக்கோயில்..

கீழ்ப்பிரிவு
தரம் 04 - 06
10 திருமந்திரங்கள்
1. உள்ளம் பெருங்கோவில்..
2. புண்ணியம் செய்வார்க்கு..
3. திருவடியே சிவம்..
4. கொல்லான் பொய் கூறான்..
5. தூய்மை அருள்..
6. தவம் செபம் சந்தோடம்..
7. பிறப்பிலி பிஞ்ஞகன்...
8. அப்பனை நந்தியை...
9. யான் பெற்ற இன்பம்...
10. பின்னை நின்று...

மத்திய பிரிவு
தரம் 07 - 09
15 திருமந்திரம் பொருளுடன்
1.அன்பும் சிவமும்...
2.யாவர்க்குமாம் இறைவர்க்கு..
3.சிவ சிவ என்கிலர்...
4.ஒற்றவன் தானே...
5.படமாடக்கோயில்
6.உள்ளம் பெருங்கோவில்
7.புண்ணியம் செய்வார்க்கு..
8.திருவடியே சிவம்
9.கொல்லான் பொய்கூறான்
10.தூய்மை அருள்
11.தவம் செபம் சந்தோடம்
12.பிறப்பிலி பிஞ்ஞகன்
13.அப்பனை நந்தியை
14.யான் பெற்ற இன்பம்..
15..பின்னை நின்று..

போட்டி இறுக்கமாக இருப்பின் பொருள் வினாவப்படலாம்.



# வீரமணிஐயர் நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.14

மகாவித்துவான் ம.த.ந. வீரமணி ஐயர் நினைவரங்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதி லட்சுமி மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பீடாதிபதி றொபேட் அருட்சேகரன் கலந்துகொண்டு நினைவுப்பேருரை ஆற்றுவார். கலாசாலையில் உள்ள வீரமணி ஐயரின் திருவுருவச் சிலைக்கான வழிபாடும் இதன்போது இடம்பெறும். (ச-25, 66, 27)



நுணாவில் பகுதியைச் சேர்ந்த பொருண்மியம் நலிவடைந்த 16 குடும்பங்களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர்உணவுப்பொதிகள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினர் லயன் செல்லத்துரையால் அவரது பேத்தியின் பிறந்தநாளை முன்னிட்டு இவை வழங்கப்பட்டன. (ஏ-25,9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.